# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032

தொலைபேசி 044–22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 27/மா/2026

நாள் 30.06.2026

ஜெ. தேன் ராஜன்
சிவகாசி --- முறையீட்டு மனுதாரர்

ஆணையர்
சிவகாசி மாநகராட்சி --- எதிர் மனுதாரர்

சிவகாசி மேற்கு, கந்தபுரம் காலனி, காமராஜர் சாலை, கதவு எண் 258 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஜெ.தேன்ராஜன் என்பவரின் 28.01.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.02.2026 அன்று பெறப்பட்டு 27/மா/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சிவகாசி மேற்கு, கந்தபுரம் காலனி, காமராஜர் சாலை, கதவு எண் 258 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஜெ.தேன்ராஜன் என்பவர் 28.01.2026 நாளிட்ட மனுவுடன் இணைத்தனுப்பியுள்ள சிவகாசி மாநகராட்சி ஆணையருக்கு முகவரியிட்ட 04.12.2024 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“1) மனைப்பிரிவு எண் 474/2019இல் உள்ள பிளாட் எண் 6 வகைக்கு முறைப்படுத்துதல் கட்டணம் ரூ.13,400/– அரசுக்கும் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் ரூ.55,850/– தங்களுக்கும் மனை உரிமையாளர் திருமதி வாணி அவர்களால் செலுத்தப்பட்டுள்ளது.

2) தமிழக அரசுக்கு வரன்முறைக் கட்டணம் ரூ.1,08,900/– மற்றும் வளர்ச்சிக் கட்டணம் சிவகாசி நகராட்சிக்கு ரூ.3,63,000/– நாங்கள் செலுத்தி உள்ளோம்.

3) சிவகாசி மாநகராட்சி ஆன பின்னர் வரன்முறைக் கட்டணம் ரூ.1,08,900/– மற்றும் சிவகாசி மாநகராட்சிக்கு வளர்ச்சிக் கட்டணம் ரூ.3,63,000/– செலுத்தி உள்ளோம்.

4) அரசுக்கு வரன்முறைக் கட்டணம் (ரூ.13,400/– + ரூ.1,08,900 + 1,08,900) ஆக மொத்தம் ரூ.2,31,900/– எங்களால் செலுத்தப்பட்டுள்ளது.

5) சிவகாசி நகராட்சி மற்றும் மாநகராட்சிக்கு வளர்ச்சிக் கட்டணம் (ரூ.55,850/– + 3,63,000/– + 3,63,000/–) ஆக மொத்தம் ரூ.7,81,850/– செலுத்தி உள்ளோம்.

6) வரன்முறைக் கட்டணம் ரூ.2,31,900/– + வளர்ச்சிக் கட்டணம் ரூ.7,81,850/– ஆக மொத்தம் ரூ.10,13,750/– செலுத்தி, 23 மாதங்கள் முடிந்த நிலையில் மேற்படி மனைப் பிரிவில் உள்ள வடக்கு பக்கம் மனை எண் 1, 2, 3, 4,5க்குரிய சாலை மட்டும் மாநகராட்சியால் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கு பக்கம் 5, 6 மனைகளுக்குரிய சாலையும் தெற்கு பக்கம், 6, 7, 8, 9, 10 மற்றும் பூங்காவுக்குரிய சாலை எதுவும் அமைக்கப் பெறவில்லை. மேலும் வளர்ச்சிப் பணிக்கான கழிவு நீர் வாய்க்கால் கட்டுதல், மின்சார வசதிக்குத் தேவையான பணிகள் செய்தல் ஆகிய எதனையும் மாநகராட்சி செய்யவில்லை.

தாங்கள் வளர்ச்சிப் பணிகளை அதற்கான தொகை ரூ.10,13,750/–ஐ பெற்றுக் கொண்டு, செய்யாத காரணத்தால் எங்களிடம் மனைகள் வாங்கியவர்கள் கட்டிடம் கட்டுவதற்கு சிரமப்படுகிறார்கள் என்ற விபரத்தை தங்களது மேலான பார்வைக்கு கொண்டு வருகின்றேன். தாங்கள் இது தபால் கண்டவுடன் மேற்படி பணிகளை செய்திட தகுந்த உத்தரவுகளை பிறப்பிக்க வேண்டுகிறேன்.

தாங்கள் இது தபாலை பெற்றுக் கொண்டு இது சம்பந்தமாக தாங்கள் எடுத்த நடவடிக்கைகளை தெரிவிக்க வேண்டுகிறேன்.''

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ 12.02.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் சிவகாசி மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 02.06.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு 05.05.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இந்நிலையில், சிவகாசி மாநகராட்சி ஆணையாளர் தனது 15.05.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

"தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், சென்னை அவர்களின் முறையீட்டு மனுவில் இணைத்து வரப்பெற்றுள்ள திரு. ஜெ. தேன்ராஜன், சிவகாசி அவர்களின் கடிதத்தில் நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் மனுவில் குறிப்பிட்டுள்ள சிவகாசி மாநகராட்சி, வார்டு A பிளாக் 19 நகரளவு எண் 76/6A–ல் உள்ள 0.57 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைகளுக்கு வளர்ச்சி கட்டணம் செலுத்தியும், தார் சாலை, வாறுகால் மற்றும் தெருவிளக்கு பணிகள் நடைபெறவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. திரு. ஜெ. தேன்ராஜன், சிவகாசி அவர்களின் மனுவில் குறிப்பிட்டுள்ள இவ்வலுவலக கடித ந.க. எண் 4497/2018/எப்1 நாள் 26.06.2018 மற்றும் 4786/2022/எப்1 நாள் 12.12.2022ன்படி மனைப்பிரிவுகளில் உள்ள மனையை வரன்முறைப்படுத்தி உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி,

மனைப்பிரிவில் குடியிருப்பு கட்டிடங்கள் எதுவும் இல்லாமல் காலியிடமாக உள்ளது. மேலும், உங்களுடன் ஸ்டாலின் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களுக்கு இவ்வலுவலக கடித ந.க. எண் 11300/2025/எப்1 நாள் 05.12.2025ம் பதில் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரர் குறிப்பிட்டுள்ள மனைப்பிரிவில் குடியிருப்பு கட்டிடங்கள் எதுவும் இல்லாமல் காலியிடமாக உள்ளது. எனவே, கட்டங்கள் அமைந்த பின் அடிப்படை வசதி செய்து தரப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் உங்களுடன் ஸ்டாலின் மனு TN/MAWS/VNR/P/USL/04NOV25/16721687 2025/04/11 இணைய தளத்தில் பதிவு செய்யப்பட்டு அதற்கான ஒப்புகை சீட்டு 04.11.2025ம் தேதி மனுதாரர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி உங்களுடன் ஸ்டாலின் மனுவிற்கு இணையதளத்திலும் பதிவு செய்யப்பட்டு அதற்கான குறுஞ்செய்தி மனுதாரரின் கைப்பேசி எண்ணிற்கு அனுப்பப்பட்டுள்ளது என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

5. மனுதாரர் 02.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''சிவகாசி மாநகராட்சி, வார்டு ஏ, பிளாக் 19, T.S.No.74/6A–ல் உள்ள 0.57 ஏக்கர் (2322.53 ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைகளுக்கு கொள்கை அளவில் ஒப்புதல் வழங்கப்பட்டு பூங்கா மற்றும் சாலைகளுக்கான நிலங்கள் ஒப்படைப்பு செய்யப்பட்டு வளர்ச்சி மற்றும் முறைப்படுத்துதல் ஆகியவற்றிற்கு ரூ.10,13,750/– செலுத்தி நான்கு வருடங்கள் கடந்தும், மேற்கண்ட மனைப்பிரிவுகளில் தார்சாலைகள், கழிவு நீர் வாய்க்கால், மற்றும் மின்வசதி ஆகியவை சிவகாசி மாநகராட்சியில் செய்துதரப்படவில்லை.

வளர்ச்சிப் பணிக்கான தொகை ரூ.10,13,750/–ஐ பெற்றுக்கொண்டு பணி செய்யாத காரணத்தால் எங்களிடம் மனைகள் வாங்கியவர்கள் கட்டிடம் கட்டுவதற்கு சிரமப்படுகிறார்கள்.

எனவே, மேற்கண்ட மனைப்பிரிவில் வளர்ச்சி பணிகளான தார்சாலைகள், கழிவு நீர் வாய்க்கால் மற்றும் மின்வசதி அமைத்திட சிவகாசி மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவினை பிறப்பிக்குமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''.

6. எதிர்மனுதாரர் தரப்பில் சிவகாசி மாநகராட்சி உதவி மாநகர திட்டமிடுநர் மற்றும் இளநிலை உதவியாளர் ஆகியோர் 02.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

''மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள சிவகாசி மாநகராட்சி, வார்டு A பிளாக் 19 நகரளவு எண் 76/6A–ல் உள்ள 0.57 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைகளுக்கு வளர்ச்சி கட்டணம் செலுத்தியும், தார் சாலை, வாறுகால் மற்றும் தெருவிளக்கு பணிகள் நடைபெறவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. திரு. ஜெ. தேன்ராஜன், சிவகாசி அவர்களின் மனுவில் குறிப்பிட்டுள்ள இவ்வலுவலக கடித ந.க. எண் 4497/2018/எப்1 நாள் 26.06.2018 மற்றும் 4786/2022/எப்1 நாள் 12.12.2022ன்படி மனைப்பிரிவுகளில் உள்ள மனையை வரன்முறைப்படுத்தி உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி, மனைப்பிரிவில் வடக்கு பகுதியில் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளதால், அங்கு தார்சாலை மின்விளக்குகள் சிவகாசி மாநகராட்சியால் செய்து தரப்பட்டுள்ளன.

ஆனால் மேற்படி, மனைப்பிரிவின் தெற்கு பகுதியில் குடியிருப்பு கட்டிடங்கள் எதுவும் இல்லாமல் காலியிடமாக உள்ளது. அங்கு அடிப்படை வசதிகள் செய்து தர சிவகாசி மாநகராட்சியில் தீர்மானம் கொண்டு வந்தபோது சிவகாசி மாநகராட்சி மாமன்றத்தால் அப்பகுதியில் குடியிருப்புகள் கட்டப்படாததால், அத்தீர்மானம் ஏற்கப்படவில்லை.

மேற்கண்ட அனுமதியற்ற மனைப்பிரிவு பின்னர் வரன்முறைபடுத்தப்பட்டதால், அங்கு ஏற்படும் குடியிருப்புகள் அடிப்படையில் அப்பகுதியில் வளர்ச்சி பணிகள் சதவீத அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

எனவே, மேற்கண்ட மனைப்பிரிவு தெற்கு பகுதியில் அடிப்படை வசதிகள் செய்து தர மீண்டும் சிவகாசி மாநகராட்சியில் தீர்மானம் நிறைவேற்ற மேற்கொள்ளப்படும் ஆனால், மாமன்றத்தின் முடிவே இறுதியாகும் என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.''

7. மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் சிவகாசி மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை, உதவி நகர திட்டமிடுநர் மற்றும் இளநிலை உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

சிவகாசி மாநகராட்சி, வார்டு A, பிளாக் 19, T.S.No.74/6A–ல் உள்ள 0.57 ஏக்கர் (2322.53 ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைகளுக்கு கொள்கை அளவில் ஒப்புதல் வழங்கப்பட்டு, பூங்கா மற்றும் சாலைகளுக்கான நிலங்கள் ஒப்படைப்பு செய்யப்பட்டு வளர்ச்சிப் பணிகள் மற்றும் முறைப்படுத்துதல் ஆகியவற்றிற்கு ரூ.10,13,750/– செலுத்தி நான்கு வருடங்கள் கடந்தும், மேற்கண்ட மனைப்பிரிவுகளில் தார்சாலைகள், கழிவு நீர் வாய்க்கால், மற்றும் மின்வசதி ஆகிய பணிகளை சிவகாசி மாநகராட்சியால் செய்து தரப்படவில்லை என்பதும், இதனால் மனுதாரரிடம் மனைகள் வாங்கியவர்கள் கட்டிடம் கட்டுவதற்கு சிரமப்படுவதால், மேற்கண்ட மனைப்பிரிவில் வளர்ச்சி பணிகளான தார்சாலைகள், கழிவு நீர் வாய்க்கால் மற்றும் மின்வசதி அமைத்திட சிவகாசி மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவினை பிறப்பிக்குமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள சிவகாசி மாநகராட்சி, வார்டு A பிளாக் 19 நகரளவு எண் 76/6A–ல் உள்ள 0.57 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவில் வடக்கு பகுதியில் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளதால், அங்கு தார்சாலை மின்விளக்குகள் சிவகாசி மாநகராட்சியால் செய்து தரப்பட்டுள்ளன என்பதும், மேற்படி, மனைப்பிரிவின் தெற்கு பகுதியில் குடியிருப்பு கட்டிடங்கள் எதுவும் இல்லாமல் காலியிடமாக உள்ளதால், அங்கு அடிப்படை வசதிகள் செய்து தர சிவகாசி மாநகராட்சியில் தீர்மானம் கொண்டு வந்தபோது சிவகாசி மாநகராட்சி மாமன்றத்தால் அப்பகுதியில் குடியிருப்புகள் கட்டப்படாததால், அத்தீர்மானம் ஏற்கப்படவில்லை என்பதும், மேற்கண்ட அனுமதியற்ற மனைப்பிரிவு பின்னர் வரன்முறைபடுத்தப்பட்டதால், அங்கு ஏற்படும் குடியிருப்புகள் அடிப்படையில் அப்பகுதியில் வளர்ச்சி பணிகள் சதவீத அடிப்படையில் மேற்கொள்ளப்படும் என்பதும், எனவே, மேற்கண்ட மனைப்பிரிவு தெற்கு பகுதியில் அடிப்படை வசதிகள் செய்து தர மீண்டும் சிவகாசி மாநகராட்சியில் தீர்மானம் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும், ஆனால் மாமன்றத்தின் முடிவே இறுதியாகும் என்பதும் சிவகாசி மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை, உதவி நகர திட்டமிடுநர்

மற்றும் இளநிலை உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள சிவகாசி மாநகராட்சி, வார்டு A பிளாக் 19 நகரளவு எண் 76/6A–ல் உள்ள 0.57 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைகள், பின்னர் வரன்முறைபடுத்தப்பட்டதால், அங்கு ஏற்படும் குடியிருப்புகள் அடிப்படையில் அப்பகுதியில் வளர்ச்சி பணிகள் சதவீத அடிப்படையில் மேற்கொள்ளப்படும் என்றும், இம்மனைப்பிரிவில் வடக்கு பகுதியில் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளதால், அங்கு தார்சாலை மின்விளக்குகள் சிவகாசி மாநகராட்சியால் செய்து தரப்பட்டுள்ளன என்றும், தெற்கு பகுதியில் அடிப்படை வசதிகள் செய்து தர சிவகாசி மாநகராட்சியில் தீர்மானம் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், மாமன்றத்தின் முடிவே இறுதியாகும் என்றும் சிவகாசி மாநகராட்சி உதவி நகர திட்டமிடுநர் மற்றும் இளநிலை உதவியாளர் ஆகியோர் தங்களது வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, அரசு வகுத்துள்ள விதிகள்படி உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சிவகாசி மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. ஜெ. தேன் ராஜன்,
கதவு எண் 258, காமராஜர் சாலை,
கந்தபுரம் காலனி, சிவகாசி மேற்கு–626 124.
விருதுநகர் மாவட்டம்.

(2) ஆணையாளர்,
சிவகாசி மாநகராட்சி, சிவகாசி.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

(4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.